# 10

# ஆன்மீக வரங்கள்



# SPIRITUAL GIFTS

# 10

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

HOW NOT TO OPERATE GIFTS

**1**

ஆன்மீக வரங்களை அறியாதிருக்கக்கூடாது.

**2**

வரங்கள், தாலந்துகளை அதிகம் வேறுபடுத்தக்கூடாது.

**3**

யாராவது முன்தள்ள எதிர்பார்க்கக்கூடாது.

**4**

திருமறைத் தத்துவங்களை மீறக்கூடாது.

**5**

உங்கள் வரம்பை மிஞ்சக்கூடாது.

**6**

பகட்டிலா வரங்களைக் குறைவாய் எண்ணக்கூடாது.

**7**

தனித்தே இயங்கக்கூடாது.

**8**

பக்தி முயற்சிகளை அலட்சியப்படுத்தக்கூடாது.

**9**

வரங்களை வியாபாரமயமாக்கக்கூடாது.

**10**

ஆவியானவரின் கனிகளைக் கவனியாதுவிடக்கூடாது.

# 10

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

### அறிமுகவுரை

- அதிகளவில் புறக்கணிக்கப்பட்டதும்,
  தவறுதலாய்ப் புரிந்துகொள்ளப்பட்டதுமானதொரு பாடம் இது.

- ஆன்மீக வரங்களைப் பற்றி புதிய ஏற்பாட்டில் மிக நீண்ட பகுதி:
  1 கொரி 12, 13 & 14

  ஆன்மீக வரங்களைத் துர்ப்பிரயோகம் செய்த கொரிந்து சபையாருக்கு ''திருத்துதல்'' உபதேசமாய் இது கொடுக்கப்பட்டது.

  இப்பகுதியிலிருந்துதான் வரங்களைப் பற்றிய
  இன்றைய உபதேசங்கள் உருவெடுத்துள்ளன.

- ஒரு கேள்வி:
  ஜெபம், வேதத் தியானம் போன்ற பக்தி முயற்சிகளுக்கு இத்தகைய திருத்துதல் உபதேசம் தேவைதான்;
  ஆனால், ''ஆவிக்குரிய வரங்களைப்'' பொருத்தவரை
  **துர்ப்பிரயோகத்தைவிட அப்பிரயோகம்தானே** அதிகம்?
  (abuse or misuse vs. disuse)

  இப்படியிருக்க, இந்த அணுகுமுறை ஏன்?
  பதில்: துர்ப்பிரயோகத்தின் எதிர்விளைவுதான் அப்பிரயோகம்!

  எனவே இப்போதனை:

  — துர்ப்பிரயோகத்தைத் திருத்தவும்
  — நற்பிரயோகத்தை ஊக்குவிக்கவும்

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

### 1. ஆன்மீக வரங்களை அறியாதிருக்கக்கூடாது.
Do not be ignorant of spiritual gifts.

■ இப்பொருள் மீது பவுல் கொடுத்த திருத்துதல் உபதேசத்தில் (1 கொரி 12,13,14),

முதல் அறிவுரையே இதுதான் —

*"ஆன்மீக வரங்கள் குறித்து நீங்கள் **அறியாதிருக்க** எனக்கு மனதில்லை"* (1 கொரி 12:1)

முடிவுரை — 14:38

*"ஒருவன் **அறியாதிருக்க** விரும்பினால் ..."*

■ சபையானது 1 கொரி 11ஐ அடிக்கடி வாசிக்கிறது — குறிப்பாக, திருவிருந்தின்போது (வச 17-34)

1 கொரி 11ஐ வாசித்து நிறுத்திவிடுவது ஏனோ?
1 கொரி 12ஐயும் வாசியாதது ஏனோ?

மட்டுமல்ல, 1 கொரி 12ஐத் தாண்டி 1 கொரி 13க்கு விரைகிறோம்.
அடுத்து, 1 கொரி 14ஐயும் விட்டுவிடுகிறோம்!
வேண்டுமென்றே இப்புறக்கணிப்பு ஏனோ?

■ சிலுவையிலறையப்படுதலோடு சில சபைகள் நிறுத்திவிடுகின்றன; எனவேதான் சிலுவைச் சொரூபத்தையே வணங்குகின்றனர்!

மற்றவர்கள் உயிர்த்தெழுதலுடன் நிறுத்திவிடுகின்றனர்;
அவர்கள் பரமேறுதலுக்குக் கடந்து செல்வதில்லை;
எனவேதான், "ஆன்மீக வரங்கள்" குறித்த பேச்சே இல்லை ...

பேதுரு: அப் 2:32,33 ... *உயர்த்தப்பட்டு ... பொழிந்தருளி ...*
பவுல்: எபே 4:7,8 ... *உன்னதம் ஏறி ... வரங்கள் கொடுத்தார் ...*

பழைய ஏற்பாட்டில் எதிர்பார்ப்பு:

தாவீது: சங் 68:18 ... *உன்னதம் ஏறி ... வரங்கள் அளித்தீர் ...*

- ''ஆன்மீக வரம்'' என்றால் என்ன?

  கிறிஸ்தவப் பணிக்கு ஆவியானவர் தரும் ஆற்றல்.

  நீங்கள் மோட்சம் சேர்ந்தால் போதுமென்றால் வரங்கள் தேவையில்லை;
  பிறரை அங்கு அழைத்துச் செல்ல வரங்கள் தேவை!

- புதிய ஏற்பாட்டில் வரங்களை வரிசைப்படுத்தும் 5 பட்டியல்கள் —

  மாற் 16:17,18 ... *அகிலவுலக* நற்செய்திப்பணி
  ரோ 12:6-8 ... *ரோம் நகர்க்* கிறிஸ்தவர்: அரசியல் தலைநகர்
  1 கொரி 12:7-20,28 ... *கொரிந்து:* தத்துவம், தீய நடத்தை
  எபே 4:13 ... *எபேசு:* சிலை வணக்கம், செல்வச் செருக்கு
  1 பேது 4:10,11 ... *உலகெங்கிலுமுள்ள* பரதேசிகள்

  ஆம், எவ்விடத்துக்கும், எச்சபைக்கும் வரங்கள் தேவை!

- வரங்களைக் குறித்துக் குறைந்தது 3 காரியங்களை
  நாம் அறியாதிருக்கக்கூடாது —

  **(அ) வரங்கள் ''இன்றைக்கும்'' உரியவை.**

  சிலர் 1 கொரி 13:8-10ஐ மேற்கோள் காட்டி
  வரங்கள் இல்லாது போய்விட்டன என வாதாடுவர்!

  — கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்தான்
  நாம் *''நிறைவு''* (பூரணம்) அடைவோம்.
  — தீர்க்கதரிசனமும் நவநாவுகளும் ஒழிந்துவிட்டதென்றால்,
  *''அறிவு''* என்னவானது (வச 8)?
  இன்று நமக்கு அறிவே கிடையாதோ???

  இவ்வசனப் பகுதி இரண்டாம் வருகையையே குறிக்கிறது —
  *''முகமுகமாய்''* (வச 12)

  இந்நிருபத்தின் துவக்கத்தில் பவுல் எழுதியதோடு ஒப்பிட்டால்
  இவ்விளக்கம் பொருந்துகிறது —

  1 கொரி 1:7,8 ... *ஒரு வரத்திலும் குறைவின்றி ...*
  *கிறிஸ்து வெளிப்பட*

*கடைசி நாட்களில்* வாழும் நமக்காகவே வரங்கள்

(யோவேல் 2:28,29; அப் 2:16-18)

**(ஆ) வரங்கள் ''ஒவ்வொருவருக்கும்'' உரியவை.**

— இச்சத்தியம் திரும்பத் திரும்ப வருகிறது ...

எபே 4:7 ... *''நம்மில் அனைவருக்கும்''*

1 கொரி 12:7,11 ... *''அவனவனுடைய ...''*

1 பேது 4:10 ... *''அவனவன்''*

— குருக்கள், மக்கள் எனும் பாகுபாடு வேதத்திற்குப் புறம்பானது. (clergy vs. laity)

ப.ஏ. : லேவியர் மட்டுமே ஆசாரியர் (எண் 18:6,7)

பு.ஏ. : விசுவாசிகள் அனைவரும் ஆசாரியர் (1 பேது 2:5,9)

கடைசி நாட்கள்: *''மாம்சமான **யாவர்மீதும்** ...''* (அப் 2:17)

இன்றையச் சபையோ = கிரிக்கெட் மைதானம்

மைதானத்தில் களைத்துப்போயிருக்கும் 13 பேர்;

அரங்கத்தில் உடற்பயிற்சி தேவையான 1000 பேர்!

விளைவு: 1 சாமு 13:19,20 ... *இஸ்ரவேலில் கொல்லனே கிடையாது*

:22 ... *ஆயுதம் தாங்கிய தலைவர்கள்;*

*வெறுங்கை மக்கள்*

ப.ஏ. ஒப்புமை: தேவனது மந்தை, தேவ சேனை,

கர்த்தரின் திராட்சைத் தோட்டம்

பு.ஏ. தனிச்சிறப்பான ஒப்புமை: கிறிஸ்துவின் **சரீரம்** —

செயல்படாத உறுப்பு ஒன்றுமில்லை.

(உ-ம்) ரோ 12:4,5 ... *அநேக உறுப்புகள் ... ஒரே உடல்*

அடுத்த வசனமே: *''வரங்கள் ... பயன்படுத்துவோம்''*

**(இ) வரங்கள் ''எண்ணற்றவை.''**

(உ-ம்) ரோ 12 ... 7 வரங்கள்

1 கொரி 12 ... 9 வரங்கள் (வச 7-10)

எபே 4 ... 5 வரங்கள்

இப்பட்டியல்களில் ஒன்றோடொன்று ஒட்டி வருவதும், கூறியது கூறலும் காணப்படுகின்றன —

சிலர் 19 வரங்களென்று கணக்கிட்டுள்ளனர்.
அது ஒன்பதும் அல்ல, பத்தொன்பதும் அல்ல,
தொண்ணூறும் அல்ல!

*வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய்ச் செய்ய வல்லவர் நம் தேவன்!* (எபே 3:20)

## ■ முடிவுரை

ஆன்மீக வரங்கள் இன்றும் இருக்கின்றன என அறிந்த நாம்,

(அ) அவைகளை நாடவேண்டும் (1 கொரி 14:1)
(அ) அவைகளைக் கேட்கவேண்டும் (லூக் 11:13)

அறியாமையின் முடிவு இயலாமை!

## 2. வரங்கள், தாலந்துகளை அதிகம் வேறுபடுத்தக்கூடாது.

Do not overdifferentiate between gifts & talents.

- வேறுபாடு:
  - ☐ தாலந்து (talent) = இயல்பான திறன், செயல் நாட்டம்
    (உ-ம்) தாலந்து பெற்ற ஆசிரியர்
    திறமையான இசைக் கலைஞன்

    இது பிறப்பிலேயே பெற்றதாயிருக்கலாம் —
    பெற்றோரிடமிருந்தும் வரலாம்!

  ஆசிரியர் நிறைந்த குடும்பம், இசை ஞானிகள் நிறைந்த குடும்பம் என்றெல்லாம் சொல்லுகிறோமல்லவா?

    இதுதான் ''வம்சாவழித் திறமை'' (family trait) என்பது.

  - ☐ திறன் (skill) = பயிற்சியினால் பெருகும் வலிமை
    (உ-ம்) திறமையான சிற்பி
    திறமையான அறுவை மருத்துவர்
  - ☐ மாறாக, ஆன்மீக வரமோ (gift) மறுபிறப்பின்போது நமக்குக் கிடைக்கிறது.

    அது தாலந்தையும் திறனையும் சற்றும் சாராதிருக்கலாம்.

    இயல்பான தாலந்துகளைப் ''பிறந்த நாள்'' பரிசுகள் என்றால்,
    ஆன்மீக வரங்களை ''மறுபிறப்பு நாள்'' பரிசுகள் எனலாம்!

- இவைகள் ஒன்றோடொன்று இணையக்கூடியவையானதால், அளவுக்குமீறி இவைகளை வேறுபடுத்தக்கூடாது.

  இது இதுதான் என்ற மயிரிழை வேறுபாடுகளைச் சொல்லிக்கொண்டு வாதாடுவதைத் தவிர்க்கவேண்டும் —
  ''செயல்பாடுதான்'' முக்கியம்.

■ வரங்களையும் தாலந்துகளையும் அளவுக்குமீறி வேறுபடுத்தக்கூடாது என்பதைத் திருமறையில் காணலாம் —

- ☐ மோசே: 40 வயதாகுமுன் எகிப்தில் வளர்ந்த திறமை (அப் 7:22)
  40 வயதானபின் கடவுள் அருளிய ஞானம் (யாத் 4:12)
  (அவனது ஊழியத்தில் இரண்டும் சேர்ந்து பயன்பட்டன.)

- ☐ தாவீது: ஆட்டிடையனாக கவண்கல் சுழற்றுவதில் திறமை.
  கோலியாத்தை வீழ்த்த தேவன் இதைப் பயன்படுத்தினார்
  (1 சாமு 17:40,48,49)

- ☐ தாவீது ஓர் இசை ஞானி, பாடலாசிரியன்
  1 சாமு 16:18; 2 சாமு 23:1,2 ... *''இனிய சங்கீதக்காரன்''*
  சாலொமோனுக்கு இதுவும், கடவுள் தந்த ஞானமும்
  கிடைத்ததல்லவா? 1 இரா 4:32
  (உ-ம்) பரம்பரைத் திறமையாக இசை: ஆதி 4:21

- ☐ *''தீர்க்கதரிசிகளின் புத்திரர்''*
  — தீர்க்கன் எலிசாவிடம் பயிற்சி பெற்று
  உருவாகிக்கொண்டிருந்தவர்களாயிருக்கலாம் —
  2 இரா 6:1 ... தீர்க்கதரிசிகளின் ''பள்ளி(?)''

- ☐ தானியேலும் நண்பரும்
  திறனும் பயிற்சியும் (தானி 1:4)
  *... ஞானம் ... மொழி ... இலக்கியம் ...*
  வரம் (தானி 1:17) *... தேவனருளிய ஞானம் ...*

- ☐ இயேசுவானவர் ஞானத்தில் *''வளர்ந்தார்''* (லூக் 2:46,52)
  இயேசுவானவர் ஞானம் *''அருளப்பட்டார்''* (ஏசா 11:1,2)
  *... அவர்மீது ஆவியானவர் ...*

- ☐ தாலந்துகளின் உவமை:
  இது *''இறையரசைக்''* குறித்த போதனை (மத் 25:14)
  *''திறனுக்கேற்ப''* தாலந்துகள் பகிரப்பட்டன (வச 15)

படிப்பினை: வரங்களைக் கடவுள் அருளும்போது,
நமக்கு எவ்வளவு முடியும் என்பதையும் கணிக்கிறார்!

☐ பவுல்: *கமாலியேலிடம்* இளவயதில் பயிற்சி (அப் 5:34; 22:3)
பின்னர் *வெளிப்பாடு:* கலா 1:11,12
அவனுக்கிருந்த பயிற்சி அத்தனை நிருபங்கள் எழுத கைகொடுத்தது.

☐ அப்பொல்லோ: கிறிஸ்தவ விசுவாசியாகுமுன் —
அப் 18:24,25 ... *"யோவானின் ஸ்நானம் மட்டும்"*
தைரியமும் ஆற்றலும் நிறைந்த பேச்சாளி.
புதிய ஏற்பாட்டுக் கிருபையைப் புரிந்துகொண்டபின் —
அப் 18:26-28 ... *அதிக திட்டமாய் ... வெகுவாய் உதவினான்*
ஆம், ஆன்மீக வரங்களைப் பயன்படுத்த
இயல்பான தாலந்துகள் வாய்க்கால்கள் ஆகலாம்!

☐ எனது சொந்த சாட்சி —

| | |
|---|---|
| தலைமைத்துவம் : | வகுப்பில் மாணவத் தலைவன், NCCஇல் முந்துநிலை |
| எழுதுதல் : | பள்ளிப் பத்திரிகைகள் |
| போதனை : | அம்மா ஒரு பள்ளி ஆசிரியை |

இவையெல்லாவற்றையும் நான் மறுபிறப்பின்போது கடவுளுக்கு அர்ப்பணித்தபோது அவரது வரங்கள் இவற்றை மேம்படுத்தின.

■ தேவன் வரங்களையும் தாலந்துகளையும் அருளுவது —
பிள்ளைகளுக்குத் தந்தையானவர் கொடுப்பதாய் மட்டுமல்ல,
படைக்கப்பட்டவர்களுக்குப் படைத்தவர் கொடுப்பதுமாகும்!

ஏதோவொன்று இயல்பான திறன்தான் என்பதால்,
அதை அவமதிக்கவோ அசட்டை செய்யவோ கூடாது!

அது இயல்பான தாலந்தாயிருந்தாலும், கொடுத்தது யார்?
1 கொரி 4:7 ... *"உன்னைச் சிறந்தவனாக்குவது யார்?"*

களிமண்ணிலிருந்து குயவன் விருப்பம்போல் வனையலாம் —

ரோ 9:21 ... *பாத்திரம் ... கனம் ... கனவீனம் ...*

இவர்களுக்காய்க் கர்த்தரைத் துதியுங்கள்:

— உயிர்களைக் காக்க சிக்கலான அறுவை
சிகிச்சைகள் செய்யும் மருத்துவர்

— மனுக்குலத்தின் நலனுக்காய்ப் புதிது புதிதாய்க்
கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள்

இவர்களெல்லாரும் கிறிஸ்தவரோ?

ஆனால், *"நல்ல ஈவு, பூரண வரம் யாவும் மேலிருந்துதான்!"*
(யாக் 1:17)

## 3. யாராவது முன்தள்ள எதிர்பார்க்கக்கூடாது.

Do not be waiting to be pushed.

■ முன் செல்லத் தயங்கிய இருவரின் எடுத்துக்காட்டு —

(அ) மோசே (யாத் 4:10-12)... *திக்கு வாய் ... குழறும் நாவு*

உடலின் குறைபாடு —

கடவுள் அதற்குப் பரிகாரம் செய்துவிட்டார்!

(ஆ) கிதியோன் (நியா 6:11-15)

வச 11 ... பண்ணை வேலையே செய்துகொண்டிருந்தவன்

வச 13 ... மீதியானியரால் சிறுமை — சோர்வுற்ற நிலை

வச 15 ... எளிய குடும்பப் பின்னணி

கடவுளின் பதில்: *உனக்கு* ***இருக்கும்*** *பலத்தோடு போ...* (வச 14)

■ தன்னார்வமாய் முன்வந்த இருவரின் எடுத்துக்காட்டு —

(அ) தாவீது (1 சாமு 17:26,32) ... *நான் போய் யுத்தம் பண்ணுவேன்...*

சங் 110:1-3இன் தீர்க்கதரிசனத்தின்படியே தாவீது செயல்பட்டான்.

*... எதிரிகள் ... உவந்தளிப்பு ... இளம் வீரர்*

(ஆ) பேதுரு (மத் 14:25-29) ... *தண்ணீர்மேல் நடந்தான்*

பேதுரு மூழ்கினான் என்றுதான் அதிகம் பிரசங்கிக்கிறோம்;

அவன் தண்ணீர்மேல் நடந்ததைச் சொல்வதில்லை!

ஏனைய பதினொருவரிலும் அவன் மேல்தானே?

செயலற்று இருப்பதைவிட உணர்ச்சிவசம் மேல்!

■ நம்மில் அநேகர் தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

நமக்குப் பெரிய அளவில் வரங்களும் தாலந்துகளும் இல்லையென்று, நாம் ஒன்றுக்கும் உதவாதவர் என்றெண்ணுகிறோம்.

இத்தவறான எண்ணத்தைத் திருமறை திருத்துகிறது —

பிர 9:11 ... *பந்தயத்திற்கு வேகம் போதாது*

:10 ... *எதுவோ அதை முழு பலத்தோடு செய்*

- 2 தாலந்தைப் பெற்றவன் தனக்கு 5 தாலந்து கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கவில்லை!

தனக்கு கிடைத்ததை வைத்து
அவன் செயல்பட்டான் (மத் 25:22,23)

- கடவுள் நமக்கருளியுள்ள வரங்களுக்கேற்ப வழி திறப்பார் —

நீதி 18:16 ... *அன்பளிப்பு ... நல்வழி ...*

*''கொஞ்ச பலம்தான்''* இருக்கிறதென்று நின்றுவிடாது,
*''திறந்த வாசலுக்குள்''* செல்வது நமது பொறுப்பு — வெளி 3:8

— பில்லி சூனியத்தால் பாதிக்கப்பட்டோரிடம் செல்லுங்கள்:
(பிலிப்பு: அப் 8:5-7)
பிசாசுகளைத் துரத்தப் பயன்படுத்தப்படுவீர்.

— மருத்துவ வசதியின்றி அவதியுறுவோரிடம் செல்லுங்கள்:
சுகமளிப்பு வரங்கள் உங்கள் மூலம் வெளிப்படும்.

— துயரத்திலும் துக்கத்திலும் மூழ்கியிருப்போரிடம் செல்லுங்கள்:
ஏசா 61:1-3 ... *அபிஷேகம் ... ஆறுதல் ...*
ஆறுதலளிக்கும் வரம் உங்கள் மூலம் செயல்படும்.

— மதவாதிகள், அறிவாளிகளிடம் சாட்சிபகரச் செல்லுங்கள்:
ஞான வரம், அறிவு வரம் உங்களுக்கருளப்படும்.
(1 கொரி 12:8; அப் 17:17)

- நாம் துணிந்து முன்வந்து இறைவனுக்காய் எதையாவது செய்யாதிருப்பதற்கு முதற்காரணம் —

**''பயம்''**

பயத்தின் விளைவு: பக்கவாதம், படுக்கை!

3 வகையான பயம் —

(அ) ஆன்மீக மண்டலம் குறித்த பயம்

போலியாய் எதுவும் கிடைத்துவிடுமோவென
கடவுளிடம் கேட்கவே பயம்!
லூக் 11:11-13 ... *அப்பம் ... மீன் ... முட்டை ...*

(ஆ) தவறுகள் செய்துவிடுவோமோ என்று பயம்

கிருபாவரங்கள் பூரணமானவை;
வரங்களைப் பயன்படுத்துவோரோ பூரணரல்ல;
பயன்படுத்தும் விதங்களும் பூரணமல்ல.

எனவேதான் —

வரங்களைக் குறித்துப் பேசும்போது,
பவுல் இப்படி எழுதினான் —
*''நான் குழந்தையாயிருந்தபோது ...''* (1 கொரி 13:11)

குறிப்பாக, தீர்க்கதரிசனம் சொல்லுதலைப்பற்றிப் பேசும்போது
அவன் *''கற்றுக்கொள்ளுதல்''* என்றெழுதுகிறான் —
1 கொரி 14:31

கற்றுக்கொள்வோர் வரிசையில் பவுல் தன்னையும் சேர்க்கிறான் —
1 கொரி 13:9 ... *''நாம்'' தீர்க்கதரிசனம் ... குறைவுள்ளது*

பழகப் பழகத்தான் வரங்களின் பயன்பாடு மேம்படும்!

(இ) கடந்த காலத் தோல்விகளால் பயம்

(உ-ம்) பிணியாளிகளுக்காய் ஜெபித்தல்:

அவர்கள் குணமடையாவிடில் பல காரணங்கள் இருக்கலாம் —

- ☐ பிணியாளியின் அவிசுவாசம்
- ☐ ஏதோவொன்றைப் போதிக்க இறைவனது சிட்சை
- ☐ *''வெளிப்பாடுகள்''* நிறைந்த பவுல்கள் தாழ்மையாயிருக்க
- ☐ மருத்துவம் மூலம் சுகமாக்க தேவனது தெரிந்தெடுப்பு
- ☐ சாகவிருக்கும் உடல் — முதிர் வயது, முதலியன

- உங்களிலிருக்கும் வரம் எதுவும் தூங்கிவிடாது பாருங்கள்
  2 தீமோ 1:6,7 ... *அனல்மூட்டி எழுப்பிவிடு ...*

- *''விருப்பத்தை''* உங்களில் உண்டாக்கும் தேவனே அதை
  *''வினையாக்கவும்''* உதவுவார் — பிலி 2:13

- ஓர் எச்சரிப்புடன் முடிக்க விரும்புகிறேன் —
  உங்கள் வரத்தை நீங்கள் பயன்படுத்தாவிடில்,
  இரட்டை இழப்பு நேரிடும் —

  (அ) தனிப்பட்டவரின் இழப்பு
  கையையோ காலையோ பயன்படுத்தாமலே இருந்தால்
  முடமாகிவிடுவீர்கள்.
  இருப்பதை இழப்பீர்கள் ...
  (உ-ம்) ஒரு தாலந்து பெற்றவன் (மத் 25:28)

  (ஆ) திருச்சபையின் இழப்பு
  திருச்சபை ஓர் உடலாய் நன்கு செயல்படாது —
  எபே 4;16 ... *ஒவ்வொரு மூட்டு ... ஒவ்வொரு தசை ...*

- உங்களால் இயன்றதை இன்றே செய்யத் தொடங்குங்கள்!
  ஆண்டவர் இவ்விதம் உங்களைப் பாராட்டுவார்:

  *''அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்''* (மாற் 14:8ஆ)

## 4. திருமறைத் தத்துவங்களை மீறக்கூடாது.
Do not violate Biblical principles.

- எழுதப்பட்ட திருவார்த்தைக்கு ஆவியானவர் முரண்படார் —
  2 பேது 1:20,21 ... *பரிசுத்த ஆவியானவரே ஏவியவர் ...*

- வரங்களின் பயன்பாட்டைச் சரிபார்ப்பது திருமறையே.

  வரங்களைப் பயன்படுத்த ஆண்டவரைப் பிசாசு தூண்டியபோது,
  இவ்விதம்தான் அவனது தந்திரங்களை அடையாளங்கண்டார் —
  (உ-ம்) *கல்லுகளை அப்பங்களாக்கும்படி* ... (மத் 4:3,4)

  மேலோட்டத்தில் இச்சோதனை நியாயமாய்த் தெரிகிறது;
  இயேசுவோ திருமறைத் தத்துவம் மீறப்படுவதைக் கண்டறிந்தார்.
  (உ-ம்) *உச்சியிலிருந்து கீழே குதியும்* (வச 5-7)

  ஆம், பகுத்தறிவது பிரதானமாய்த் **திருவசனத்தின்** மூலம்தான் —
  எபி 5:13,14 ... *வசனம் ... பயிற்சி ... பகுத்தறிதல்*

- ஆவியின் அசாதாரண வெளிப்பாடுகளை அப்போஸ்தலர்
  வசன வெளிச்சத்தில் அலசியதைக் கவனியுங்கள் —

  - ☐ பெந்தெகொஸ்தே நாள்
    — தீர்க்கன் யோவேல் (அப் 2:16) ... *இதுவே அது ...*
  - ☐ கொர்நேலியு வீட்டில் அருட்பொழிவு
    — தீர்க்கன் ஆமோஸ் (அப் 15:14,15)... *எழுதியிருக்கிறதற்கு...*

  *"தேவ வல்லமை ... தேவ வசனம்"* ... இரண்டையும் பிரிக்கக்கூடாது —
  மத் 22:29 ... *தப்பான எண்ணம், ஏனெனில் ...*

- ஒருவன் போதித்தால்,
  *தேவ வாக்கியங்களின்படிப் போதிக்கட்டும்* (1 பேது 4:10,11)
  (சூழமைவு: வரங்கள்)

(உ-ம்) திருமுழுக்கினன் யோவான்:

□ *"எலியாவின் ஆவியும் பலமும்"* (லூக் 1:17)

□ *"இறைவார்த்தை அவனுக்கு உண்டாயிற்று"* (லூக் 3:2)

□ அவனது செய்தி: *"எழுதியிருக்கிறபடியே"* (லூக் 3:3-6)

எதுவும் இறைவார்த்தைக்கேற்ப இல்லையெனில்,

அது *பதர்தான்* — எரே 23:28

■ வரங்களைக் குறித்த விவாதத்தில் பவுலின் முடிவுரை —

1 கொரி 14:36,37 ... *"தேவ வசனம் ... கற்பனைகள் ..."*

□ விளையாட்டுப் போட்டி

*"சட்டத்தின்படி"* (2 தீமோ 2:5)

□ கட்டிடத்தைப் பரிசோதித்தல்

*"நெருப்பினால்"* (1 கொரி 3:12,13)

*"என் வார்த்தை அக்கினியல்லோ?"* (எரே 23:29)

காரணம்: வரங்களின் அப்பியாசிப்பு குறைபாடுள்ளது —

*"குறைவுள்ளது"* (1 கொரி 13:9)

தேவ வசனமோ "தவறில்லாதது" —

*"குறைவற்றது"* (சங் 19:7)

■ சில நடைமுறைக் காரியங்களைக் கவனிப்போம்:

□ வரங்கள் செயல்படும் கூடுகைகளில்

காணப்படும் ஒழுங்கீனமும் குழப்பமும் —

(அ) *குழப்பத்திற்குக் கடவுள் காரணரல்ல*

1 கொரி 14:33

(ஆ) கிரமமும் கட்டுப்பாடும் — மனிதரது பொறுப்பு

1 கொரி 14:32,33

*"தீர்க்கரின் ஆவிகள் தீர்க்கருக்கு அடக்கம்"*

□ அன்னிய பாஷை பேசுதல்:

தடை வரம்பு: 1 கொரி 14:28

*"அர்த்தம் சொல்ல ஆளில்லை... பேசாதிருக்கட்டும் ...*

*தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசுக"*

(அன்னாள் போல் அமைதி ஜெபம் — 1 சாமு 1:13)

☐ குணமாக்கும் வரங்கள்:

எண்ணெயை ஆசீர்வதிக்க ஜெபிக்கக்கூடாது.
எதையும் ''ஜெப எண்ணெய்'' என்றழைக்கக்கூடாது.
*பிணியாளியைத்தான்* எண்ணெய் பூசி ஆசீர்வதிக்கவேண்டும்
(மாற் 6:13; யாக் 5:14)

திருமறைத் தத்துவம்: ஆண்டவர் ''பொருட்களை'' அல்ல,
''ஆட்களையே'' அபிஷேகிக்கிறார், புனிதப்படுத்துகிறார்.

ஜெபத் துணி: வழக்கமாய்ச் செய்யப்பட்டதல்ல
— ஒரு *''விசேஷித்த''* சூழல் (அப் 19)
— துணியைப் பவுல் அனுப்பவில்லை; மக்கள் எடுத்தனர்.

திருமறை: *''போய் ... கரங்களை வையுங்கள்''*... (மாற் 16:15,18)
ஜெபத்திற்காய் மூப்பரை அழையுங்கள் (யாக் 5:14)

*''வேதமும்'' ''சாட்சியும்''* சேர்ந்து தேவை (ஏசா 8:20)
அதாவது, உபதேசமும் உதாரணங்களும்
சூழமைவு: வச 19 ... *செத்தவரிடம் விசாரிப்பு*

☐ பிசாசு விரட்டுதல்:
எதையும் வாக்குப்பண்ணப் பிசாசிடம் கேட்காதீர்!
*அவன் பொய்யன், பொய்க்குத் தந்தை* (யோ 8:44)

■ திருவசனம் பிரசங்கிக்கப்படுதலைக் கேட்பதிலிருந்து மக்களைத் திசை திருப்புவதாய் வரங்கள் செயல்படக்கூடாது —

(உ-ம்) இயேசு: வசனம் *கேட்க,* வியாதி *குணமாக* (லூக் 5:1,15-17)

(உ-ம்) எபி 2:3,4...*வரங்களல்ல, இரட்சிப்புதான் ''இவ்வளவு பெரியது!''*

(உ-ம்) வரங்களைக் குறித்து விளக்கங்கள் கொடுத்துவிட்டு, முடிவில்,
பவுல் ***''சுவிசேஷத்தை''*** *வேத வாக்கியங்களின்படி*
வரையறுக்கிறான் — 1 கொரி 15:1-5

■ கிருபா வரங்களைத் திருமறைப் பாணியில் பயன்படுத்தும்படி புதிய ஏற்பாட்டு நிருபங்களைத் திரும்பத் திரும்பப் படியுங்கள்.

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

### 5. உங்கள் வரம்பை மிஞ்சக்கூடாது.

Do not exceed your measure.

**கடவுளது** வல்லமையை நாம் மட்டுப்படுத்தக்கூடாது;
அதே வேளையில்,

**நமது** வரம்பையும் மறந்துவிடக்கூடாது!
ரோ 12:4-8 ... வரங்களின் ஒரு பட்டியல்
வசனம் 3இல் துவக்க வரிகளைக் கவனியுங்கள் —
*"... எவனானாலும் ... மிஞ்சி ... எண்ணாமல் ..."*

இத்தத்துவத்தின் அடிப்படையிலேயே அப்போஸ்தலர்
ஊழியம் செய்தனர் — 2 கொரி 10:13,14
*"அளவு ... அளவு ... அளவு ... அளவு ..."*

■ வரமானது *கடவுள்* தரும் *"பொக்கிஷம்"* என்றாலும்,
நாம் வெறும் *"மண்பானைதான்"* என்பதை மறந்துவிடக்கூடாது —
2 கொரி 4:7

மனிதனது வரம்புகளைத் தெய்வீக ஏதுக்கள் அகற்றுவதில்லை.

— அப்படியானால் ஒரு கேள்வி:
கடவுள் தமது ஆவியை *"அளவில்லாமல்"* தரவில்லையா?

இல்லை, அது அவரது திருக்குமாரனுக்கு மட்டுமே —
யோ 3:34 ... இவை யோவானின் வார்த்தைகள் —
***"அவருக்குள்** கடவுளின் பரிபூரணம்"* (கொலோ 1:19)
:31 ... நாமோ *மண்ணிலிருந்து* உண்டானோர்!

இது இயேசுவுக்கே உரித்தானது —
எபி 1:8,9 ... *"உமது தோழருக்கும் மேலாக ..."*

— அப்படியானால், இயேசுவைவிடப் பெரியவற்றைச்
செய்வதென்றால் என்ன? யோ 14:12

*''நான் பிதாவிடம் போகிறபடியால் ...''* —

அதாவது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலம்

*''பெரிய'' கிரியைகள் = ''மிகுந்த'' கனி*

அடுத்த அத்தியாயத்திலேயே (15:5,8)

இது ''இயேசுவுக்குச் சாட்சியாயிருப்பது'' பற்றியதே (15:26,27)

(கடினமான வசனப் பகுதிகளை அதினதின் சூழமைவிலேயே அர்த்தப்படுத்தவேண்டும்.)

■ ''வரம்பை மிஞ்சக்கூடாது'' என்பதற்குச் சில நடைமுறை எடுத்துக்காட்டுகள் —

☐ தீர்க்கதரிசனம் உரைத்தல்:

2 பேது 1:20,21இல் உள்ளதுபோல் ''வேத வசனம்'' எழுத அந்த ''சிறப்பு வரிசையில்'' இன்று தீர்க்கர் கிடையாது.

விசுவாசிகளோ இன்றும் தீர்க்கர்களாய்ச் செயல்படலாம் —

அப் 2:17 ... *குமாரர் ... குமாரத்திகள் ... தீர்க்கதரிசனம்*

எபே 4:13 ... *சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் ...*

எனவே,

*''கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் ...''* என்று தீர்க்கதரிசன வார்த்தைகளைத் துவங்குவதற்குப் பதிலாக,

''நாம் இதைச் செய்யவே கர்த்தர் விரும்புகிறார் என்று நான் உணருகிறேன்'' என்று சொல்லலாம்!

இதுதான் *''விசுவாச அளவின்படி''* தீர்க்கதரிசனம் சொல்லுதல் (ரோ 12:6இ)

☐ பவுல் ஓர் அப்போஸ்தலன் மட்டுமல்ல, தீர்க்கதரிசியும் — (அப் 13:1; 15:32)

ஆனாலும் எவ்வளவு தாழ்மையுடன் எழுதினான் பாருங்கள்:

*''நான் அல்ல, கர்த்தரே''* (1 கொரி 7:10)

*''கர்த்தர் அல்ல, நான்''* (வச 12)

*''என்'' அபிப்பிராயம்* (வச 40)

☐ தீர்க்கன் அகபுவும் சுவிசேஷகன் பிலிப்புவின் குமாரத்திகளும் ...
பவுலுக்கு அவர்கள் சொன்ன தீர்க்கதரிசனம் ஒரு ''கட்டளை'' அல்ல, ''தகவல்'' மட்டுமே —

(Not an instruction but only an information)

அப் 21:8-14

*''வேண்டினர் ... அழுதனர்''* (வச 13)

இங்கு யார் சரி? பவுல்தான் (அப் 23:11)

எனவேதான், *''நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதல் குறைவுள்ளது''* என்றெழுதினான் பவுல் (1 கொரி 13:9)

☐ இன்னோர் எடுத்துக்காட்டு —

**அற்புதங்கள்,** குறிப்பாக இயற்கைக்கு அப்பாற்பட்டவை.

யோசுவா — சூரியன், சந்திரன் (யோசு 10:12-14)

*''அப்படி முன்னும் பின்னும் நடந்ததில்லை''*

இவ்வித ''அபூர்வ'' அற்புதங்களை நிகழ்த்திவிட முயலாதீர்!

(உ-ம்) எலியா: 3½ ஆண்டு வறட்சி, பின்னர் மழை.

இது இன்று புறவின ஆளுநர் அல்லது கிறிஸ்தவரல்லாதோர் முன் இவ்விதம் சவால்விட அல்ல —

*''ஒருவருக்காயொருவர் ஜெபிக்கவே''* எடுத்துக்காட்டு.

சூழமைவு: யாக் 5:16

■ உங்கள் வரத்தின் ''தன்மை'' மற்றும் ''அளவுக்குள்'' செயல்பட்டால்தான் உங்கள் முக்கியத்துவ வரிசைப் பட்டியல் சரியாயிருக்கும் —

(உ-ம்) அப் 6:2-4 ... *வசனப் போதனை* vs. *பந்தி விசாரணை*

எல்லாவற்றையும் செய்ய முயலக்கூடாது.

■ பொதுவிடங்களில் **பெண்களின்** திருப்பணி குறித்த அப்போஸ்தல வரம்புகளும் ஏற்கப்படவேண்டும்.

— கடவுளுக்குமுன் ஆண்-பெண் நிலை ஒன்றேதான்: கலா 3:28

— வரங்களைப் பயன்படுத்துவதிலோ ''அதிகார'' தோரணை கூடாது

1 கொரி 14:34 *''... அமர்ந்து ... அடங்கி ...''*

## 6. பகட்டிலா வரங்களைக் குறைவாய் எண்ணக்கூடாது.

Do not underestimate less spectacular gifts.

- புதிய ஏற்பாட்டிலுள்ள 5 வரங்களின் பட்டியல்களில் நீண்டது, யாவராலும் விரும்பி வாசிக்கப்படுவது —

  1 கொரி 12:8-10

  இந்த 9-வரப்பட்டியல் பகட்டிலா வரங்களுடன் தொடங்குகிறது:

  *''ஞான வசன வரம் + அறிவு வசன வரம்''*

  அடுத்த நீண்ட பட்டியல்: ரோ 12:6-8

  *கிருபா வரங்கள்* — Charismatic gifts

  இப்பட்டியலிலுள்ள 8இல் 7 பகட்டற்றவை —

  *''தீர்க்கதரிசனம்''* — இது ஒன்றுதான் இதில் கவர்ச்சிகரமானது.

- அதிக ஆர்ப்பாட்டமற்ற வரங்களில் கொரிந்து விசுவாசிகளுக்கு நாட்டமில்லை —

  எனவேதான் பவுல் பல கேள்விகள் தொடுத்தான்:

  1 கொரி 12:28 ... *உதவிகள் ... ஆளுகைகள் ...*

  தனது 7 கேள்விகளில் இவையிரண்டையும் விட்டுவிட்டான்!

  அவன் இவ்விதம் கேட்டானா? —

  ''எல்லாரும் *உதவி* செய்கிறார்களா?!!!''

  அர்த்தம்: அனைவரும் ஒருவருக்கொருவர் **உதவ**வேண்டும்;
  மற்றதைவிட இதையே *''நாட''* வேண்டும் (வச 31)

  (உ-ம்) ஸ்தேவான் (1 கொரி 16:15-18) — 4 வசனங்கள்

  (உ-ம்) ரோமர் 16 ... 26 உதவிக்காரர், உதவிக்காரிகள்!

  *''பெபேயாள்''* துவங்கி (வச 1,2)

  இப்பட்டியலில் 10 பெண்டிர்!

(உ-ம்) வில்லியம் கேரியின் சகோதரி 50 ஆண்டுகள் படுக்கை —
அவர்களால் பேசக்கூட முடியாது;
ஆனால் கேரிக்காய் ஜெபித்து அவரை
நீண்ட கடிதங்கள் மூலம் உற்சாகப்படுத்தினார்கள்!

இன்று கேரி போன்ற மிஷனரிகள் இல்லையென்றால்,
கேரியின் சகோதரி போன்ற ''உதவியாளர்'' இல்லாததே காரணம்!

- **ஊக்குவிப்பு** எனும் வரம் எவ்வளவாய்த் தேவை!

ரோ 12:8அ ... *(புத்திசொல்லுதல்* = ஊக்குவித்தல்)

சிறந்ததோர் எடுத்துக்காட்டு: பர்னபா
அப் 4:36 ... *''ஆறுதலின் மகன்''*
= ''ஊக்குவிப்பவன்''

— அப்போஸ்தலருக்குப் பவுலை அறிமுகம் செய்ததும் அவனை வளர்த்ததும் பர்னபாதான்
அப் 9:26,27 (எருசலேம்)
11:23-26 (அந்தியோகியா)

— **மாற்குவை** மீட்டெடுத்ததும் அவனே
(அப் 15:39 / 2 தீமோ 4:11ஆ)

பவுல் எழுதியது 13 நிருபங்கள்;
மாற்கு எழுதியது 1 சுவிசேஷம்;
பர்னபா ஒரு புத்தகம்கூட எழுதாவிட்டாலும்,
இந்த 14 புத்தகங்களுக்குப் பின்னணியில் இருந்தான்!

- இன்னொரு கவர்ச்சியற்ற ஆனால் தேவைமிகு வரம்:

ரோ 12:8இ *''கிருபை வரங்கள்''* (வச 6) —
*''உற்சாமாய்* ***இரக்கம்*** *காட்டுதல்''*
நேசிக்கப்படாதோர், நேசிக்கப்பட முடியாதோர் நடுவிலும்
புன்னகையுடன் பணியாற்றுவோருக்கு இருக்கும் வரம்!
(உ-ம்) அன்னை தெரசாவும் கருணை இல்லச் சகோதரிகளும்

■ இத்தகைய வரங்கள் பகட்டில்லாதிருக்கலாம் (spectacular);
ஆனால் அவையெல்லாம் பரமனளித்தவை (supernatural)!

அவை *"பலமில்லாதவை"* போன்று தோன்றலாம்;
ஆனால் அவைதான் மற்றவைகளைவிட
*"மதிக்கப்படவேண்டியவை"* (1 கொரி 12:22-24)

உயரே இருக்கும் *"தலை"*கூட
கீழே இருக்கும் *"பாதங்களை"* அசட்டை செய்யக்கூடாது.

■ கவர்ச்சிக் குறைவான இன்னும் சில வரங்கள் —

☐ மணமாகாது தனித்திருத்தல் (1 கொரி 7:7)

☐ விருந்தோம்பல் (1 பேது 4:9,10)

☐ மன்றாடி ஜெபித்தல்: எரேமியா (எரே 9:1) போலவோ,
பவுல் (ரோ 9:1-3; 10:1) போலவோ,
இரவும் பகலும் புலம்புவது அரிது.
அப்படியே, ரீஸ் ஹவல்ஸ் (1879-1950),
ஜான் ஹைடு (1865-1912).

☐ எழுதுதல் — இல்லையேல் படியாத பேதுரு, யோவான்
போன்றோர் எப்படி எழுத முடியும்? (அப் 4:13)

■ திருமறையை எழுதிய தீர்க்கரில் பலர் **அற்புதங்களே**
செய்யவில்லை — (உ-ம்) ஏசாயா, எரேமியா, யோவேல், ஆமோஸ்

இயேசுவைப் பொருத்தவரை, தீர்க்கர்களிலெல்லாம் பெரியவன்
திருமுழுக்கினன் யோவான்தான் (மத் 11:11அ)

— அவன் அற்புத ஊழியனான *எலியாவின்*
*"ஆவியும் பலமும்" கொண்டிருந்தான்* (லூக் 1:16,17)

— ஆனாலும் அவன் *அற்புதம் ஒன்றும் செய்யவில்லை* (யோ 10:41)

■ சரித்திரத்திலும் உயர்ந்து நிற்கும் தேவ மனிதர் பலர்
பிரமிக்கத்தக்க அற்புதம் எதுவும் செய்யவில்லை:

ஜார்ஜ் முல்லர் (1805-1898)
— ஆயிரக்கணக்கான அனாதைகளைப் பராமரிக்கும் விசுவாசம்

ஹட்சன் டெய்லர் (1832-1905)

— சீனாவை ஊடுருவும் விசுவாசம்

அதோனிராம் ஜட்சன் (1788-1850)

— பர்மாவில் 6 ஆண்டுகள் கனியேதுமில்லை.

''ஊழியம் எப்படி?'' என்று அவரிடம் கேட்கப்பட்டது;

''ஒளிமயமான எதிர்காலம் திருவாக்குகளால் தெரிகிறது'' என்றார்!

"The prospects are as bright as the Promises of God!"

இப்படி எத்தனையோ மிஷனரிகளுக்கு இவ்விசுவாச வரமிருந்தது — எனவேதான் இருட்டுக்குள்ளும் இக்கட்டுக்குள்ளும் துணிந்து சென்றனர்!

- பகட்டற்ற இன்னொரு வரம் —

  *''ஆளுகை''* (1 கொரி 12:28) = தலைமைத்துவம்

இந்த வரத்தை நாம் ஒப்புக்கொண்டாலும்,

உயர்மட்ட தலைமைத்துவத்தையே நினைக்கிறோம் —

(உ-ம்) எத்திரோ & மோசே (யாத் 18:21,25)

1000, 100, 50, 10 பேருக்குத் தலைவர்கள் —

10 பேருக்குத் தலைவராயிருப்பவர்களை நினைக்கிறோமா?

- **முடிவுரை**

அனைத்து வரங்களையும் சமமாக மதித்தால்தான்,

திருச்சபையின் அங்கத்தினர் ''ஒவ்வொருவரும்''

செயலாற்றுவதைக் காண முடியும் —

இல்லையேல்,

பெரும்பாலான திருச்சபையினர் வேலை இல்லாதோராக,

அல்லது வேலை குறைவானோராகவே, இருப்பர்!

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

### 7. தனித்தே இயங்கக்கூடாது.

Do not function independently.

■ ''தற்சார்பு (independence) அல்ல, சகச்சார்பு (interdependence)''
— இதுவே இறையரசின் கோட்பாடு.

''எல்லா'' வரங்களும் பெற்றவர் எவருமிலர்;
இல்லையேல் ''உடல்'' எனும் ஒப்புமை பொருந்தாது.

9 வரங்களைப் பட்டியலிட்டவுடன்,
*''உடல்''* எப்படிச் செயல்படவேண்டுமெனப் பவுல் விளக்குகிறான்—
1 கொரி 12:11 ... வரங்கள் பகிரப்படுவது ''தனி நபருக்கு''
:12 ... செயல்படுவதோ ''கூட்டாக''

எவ்வளவு விரிவான விளக்கம் பாருங்கள்: வச 12-27 — *''சரீரம்''* —
16 வசனங்களில் 17 முறை!

■ பிறரின்றி வாழுமளவிற்கு எவரும்
போதுமான வரங்கள் பெற்றவரல்ல,
போதுமான ஞானம் உள்ளவரல்ல,
போதுமான பலம் நிறைந்தவரல்ல!

*''வேறொருவனுக்கு ... வேறொருவனுக்கு...''* (1 கொரி 12:7-10) ... 8 முறை
சவால்நிறை கேள்விகளையும் கூற்றுக்களையும் பாருங்கள் —

□ ''உடலானது ஒரே உறுப்பு **அல்ல**, அநேக உறுப்புகள்''
(1 கொரி 12:14)

□ ''அவையெல்லாம் ஒரே உறுப்பானால், உடல் எங்கே?'' (வச 19)

தூயாவியானவர் எல்லா வரங்களையும் ஒரே நபர்மீது குவிக்காமல்,
அவற்றைப் பகிர்ந்தளிக்கிறார் — 1 கொரி 12:11

ஒரு நபருக்கு மற்றவர்களைவிடக் கூடுதல் வரங்களிருந்தாலும்
பெருமையடித்துக்கொள்ள இடமேயில்லை —

வரங்கள் அருளப்படுவது **''கிருபையினாலேயே''** —

ரோ 12:6 **...** *கிருபையின்படியே ...*

எபே 4:7 **...** *கிருபை ...*

1 பேது 4:10 **...** *கிருபையுள்ள ...*

(இன்னொரு மொழியாக்கம்: *அருட்கொடைகள்)*

■ **குழுப்பணிக்கு** முக்கிய காரணம் கிருபாவரங்களே —

இதோ சில எடுத்துக்காட்டுகள்:

☐ மோசேயும் ஆரோனும்

யாத் 4:14-16 ... மோசேக்கு வாயாக ஆரோன்!

மோசேயின் கோல்: யாத் 4:1-4,17 (தேவனுக்குமுன்)

ஆரோனின் கோல்: யாத் 7:8-12 (பார்வோனுக்குமுன்)

மோசேயின் பரந்த மனதுதான் என்னே!

☐ திருச்சபைச் சரித்திரத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு:

வில்லியம் பூத்: முக்கியமான மாநாடு ஒன்றில் பிரசங்கிக்கச் செல்ல முடியாதபோது,

அவர் அனுப்பிய தந்தி: ''மற்றவர்கள்!''

அடுத்த வரிசையினரைப் பக்குவப்படுத்திப் பயன்படுத்துவது ''வரம் பெற்ற'' உயர்மட்டத் தலைவர்களுக்குக் கடினம்தான் —

*''கால்களைப்'' பார்த்துத் ''தலை''* ... (1 கொரி 12:21)

அதாவது, சபையினர், குழுவினர் அனைவரும் பயிற்றுவிக்கப்பட்டுத் திருப்பணியில் ஈடுபட மேய்ப்பர்களும் தலைவர்களும் முடிந்ததையெல்லாம் செய்யவேண்டும் —

தனி நபருக்கு ... *வரத்தை அனல் மூட்டு* (2 தீமோ 1:6)

சபையினருக்கு ... *வரத்தைக் கொடுங்கள்* (ரோ 1:10)

இல்லையேல், 1 சாமு 13:22 — படைக்கலன் இல்லா படை வீரர்!

இன்றைய இந்நிலைக்காய், தெபொராளுடன் சேர்ந்து, நாம் புலம்பவேண்டும் — நியா 5:8ஆ

☐ இன்னொரு நேர்த்தியான எடுத்துக்காட்டு:

பேதுரு**வும்** யோவா**னும்**: *''**எங்களை** நோக்கிப்பார்!''* (அப் 3:4)
*''பேதுரு**வும்** யோவா**னும்**''* (வச 1,3,11; 4:13)
*''வெளியரங்கமான'' அற்புதத்தின்* இரகசியம் (4:16)

**குழு** ஊழியத்தில்தான் ''எதிர்பாராதவை'' நடக்கும்:

— 12 பேரை அனுப்புகையில் பிசாசுமீது வல்லமை (மத் 10:1)
— 70 பேரை அனுப்புகையில் குணமளிக்கும் வல்லமை மட்டும் (லூக் 10:1,9)

எனவேதான், *''பிசாசுகளும் கீழ்ப்படிகின்றன''* எனும் ஆச்சரியம் (வச 17)

நியமனப்படி வல்லமை பின்னர்தான் கொடுக்கப்பட்டது (வச 19)

— *சாத்தான் ''விழுந்தான்''* (வச 18) ... **குழுப்**பணியின் சக்தி.
குழு ''மனப்பான்மை'' — *70 பேர் ஆரவாரமாய் ...* (வச 17)

☐ இன்னோர் எடுத்துக்காட்டு —
லீஸ்திரா நகரில் பவுலும் பர்னபாவும் (அப் 14)
சப்பாணி குணமடைந்தான்! என்னே பரபரப்பு!

(வச 12) பர்னபா — யூப்பித்தர் — கிரேக்கில் தலைமைத் தெய்வம் — அமைப்பாளர்!
பவுல் — மெர்க்குரி — கிரேக்கில் தூதறிவிப்புத் தெய்வம் — செய்தியாளர்!
போட்டியில்லை, அனுசரணை! கூட்டுறவில் கூட்டுழைப்பு!

■ தலைவர்களுக்கு ஒரு வார்த்தை:

திருத்துகிறேன் என்று எவரையும் தீர்த்துவிடாதீர்.
பாதகச் சிந்தை மக்களைப் பாழாக்கிவிடும்.

(உ-ம்) பவுலின் திருத்தங்கள் ஊக்குவிப்போடு இணைந்திருந்தன —
1 கொரி 14:26ஆ,40 ... ***எதையும்*** *பக்திவிருத்திக்காய் ...*
:31 ... **எல்லாரும்** கற்கணும் ... தேறணும் ...
:39 ... பாஷை பேசுதலைத் தடுக்காதிருங்கள்
பேசிக்கொண்டே ... பேசாமலே ... இரண்டும் வேண்டாம்!

(எனது திருத்துதல் உபதேசங்களில் நான் இதை மறப்பதில்லை.)

- நமது குழுவுக்குள் மட்டுமல்ல, நம்மிடமில்லா வரங்களை அப்பியாசிக்கும் பிற குழுக்களோடும் சகச்சார்பு இருக்கவேண்டும்—

(உ-ம்) திருச்சங்கங்களோடு திருச்சபைகள்;
திருச்சபைகளோடு திருச்சங்கங்கள்.

திருச்சங்கங்கள் (Missions): பாறை வெட்டியெடுப்போர்
திருச்சபைகள் (Churches): சிற்பம் செதுக்குவோர்

இயேசுவானவர் சொல்லியது —
ஒருவன் *விதைக்கிறான்,* இன்னொருவன் *அறுக்கிறான்;*
இருவரும் *''சேர்ந்து'' மகிழுகின்றனர்* (யோ 4:36)
பிறரது உழைப்பைப் பாராட்டி மகிழ்தல்!
இதுதான் ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்பது! (unity in diversity)

- ஒன்றுக்கொன்று சார்ந்துள்ள வரங்களின் தன்மையும் நமக்குச் சகச்சார்பைப் போதிக்கின்றன —

1 கொரி 12:7-10,28; ரோ 12:8
*ஞானம் & அறிவு*
*குணமாக்குதல் & அற்புதங்கள்*
*நவநாவுகள் & அர்த்தம் சொல்லுதல்*
*அப்போஸ்தலர் & தீர்க்கர்*
*மேய்ப்பர் & போதகர்*
*ஆளுகைகள் & உதவிகள்*
*தலைமைத்துவம் & இரக்கம்*

கீழ்க்கண்டவற்றை நாம் செய்யத் தவறிவிட்டோம் —
- ☐ விசுவாசிகளைப் பயிற்றுவித்தல்
- ☐ பிறரிடமிருந்து கற்றறிதல்
- ☐ குழுக்களாய்ச் செயல்படுதல்

இதனால், ஒரு நபரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர 1000 கிறிஸ்தவர் மற்றும் 6 மேய்ப்பர்களுக்கு ஓராண்டு பிடிக்கிறது!
(Campus Crusade for Christ தந்த தகவல்)
என்னே பரிதாபம்!

■ நற்செய்தியறிவிப்புப் பேராணை:

மாற் 16:16 ... *விசுவாசிக்கிறவன் ...*

:17,18 ... *அவர்களால் ... அவர்கள் ... அவர்கள் ...*

:20 ... *அவர்கள் ... அவர்களால் ... ஆமென்!*

■ சார்லஸ் வெஸ்லியின் (1707-1788) ஒரு பாடல்:

*தேவா, நகர்த்திடும் எங்களை, நடத்திடும்;*
*கிருபா வரங்களைப் பகிர்ந்தளித்திடும்;*
*உம் சித்தப்படியே எங்கும் வைத்திடும்,*
*எங்கள் பணி முடித்திட உணர்த்திடும்;*
*எங்கள் நிலை தவறாது பிடித்திடும்;*
*ஒருவருக்கொருவர் துணையாய் நிறுத்திடும்;*
*பெற்ற கிருபை வீணாகாது காத்திடும்;*
*சிம்மாசனச் சிற்பியே, முடியச் செதுக்கிடும்!*

(பார்க்க: பக்கங்கள் 59-61, 303-306, 350-351, 517-519, 546-549, 642-646)

## 8. பக்தி முயற்சிகளை அலட்சியப்படுத்தக்கூடாது.
Do not neglect devotional disciplines.

■ மத்தேயு 10ஆம் அத்தியாயத்திலேயே இயேசுவானவர் தமது சீடருக்குப் *பிசாசுகளைத் துரத்தும் வல்லமை* தந்துவிட்டார் — மத் 10:1

ஆனால் 17ஆம் அத்தியாயத்தில் பிசாசின் பிடியிலிருந்த சிறுவனை அவர்களால் விடுவிக்க முடியவில்லை — மத் 17:16

ஏன்? (வச 19-21) ... *விசுவாசம் ... ஜெபம் ... உபவாசம்*

குறைந்தது மூன்று பக்தி முயற்சிகளை நாம் கவனத்தில் வைத்திருக்கவேண்டும் —

**(அ) மன்றாட்டு ஜெபம்**

- ☐ யூதா 20 ... *பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி ...* *"உறுதிப்படுத்தி"* அதாவது ஆயத்தப்படுத்தி ...
- ☐ லேவி 6:12,13...*பலிபீடத்தில் அக்கினி* (விளக்கப் போதனை)
- ☐ லேவி 9:23...மோசேயும் ஆரோனும் **வெளியே** வந்து மக்களை ஆசீர்வதிக்குமுன் **உள்ளே** சென்று தேவனைச் சந்தித்தனர்.
- ☐ ஞானத்திற்கான ஜெபம் ஞான வரத்தைக் கூர்மையாக்கும் (1 கொரி 12:8/யாக் 1:5)
- ☐ எலியா ஓர் அசாதாரண வல்லமையுள்ள தீர்க்கன் —
  3½ ஆண்டுகள் மழையை நிறுத்துவதும்
  பின்னர் வானங்களைத் திறப்பதும் சாதாரண காரியமா?
  ஆனாலும், இங்கு வலியுறுத்தப்படுவது ஜெபமே —
  யாக் 4:16ஆ,17,18... *ஜெபித்தான்... மறுபடி ஜெபித்தான்*
- ☐ ஆதிச்சபை இப்பாடத்தைக் கற்றிருந்தது —
  அப் 2, பெந்தெகொஸ்தே; அப் 3, அற்புதம்

ஆனாலும், அப் 4:30,31 ... *ஜெபித்தனர் ... நிரம்பினர் ... பேசினர்*
(ஏற்கனவே அற்புதங்கள் இருந்தாலும் ...)

அதிக ஜெபம், அதிக வல்லமை; (More prayer, more power!)
கொஞ்ச ஜெபம், கொஞ்ச வல்லமை; (Less prayer, less power!)
இல்லை ஜெபம், இல்லை வல்லமை! (No prayer, no power!)

எனவேதான், அவ்வளவு வல்லமையுள்ள இயேசு
தனித்து ஜெபிக்க அடிக்கடி கிளம்பிவிட்டார்.
மாற் 1:32-35; லூக் 5:15,16

### (ஆ) சிரத்தையெடுத்து வேதத் தியானம்

- ☐ தீமோத்தேயுவுக்குப் பவுலின் அறிவுரை (1 தீமோ 4:13-15)
- ☐ அனைத்து வரங்களுக்கும் அடிப்படை விசுவாசமே:
  *''**விசுவாசிக்கிறவர்களால்** நடக்கும் அடையாளங்கள் ...''*
  (மாற் 16:17)
  ''இவ்விசுவாசம் வளருவது திருவசனத்தினாலேயே ...''
  (ரோ 10:17)
- ☐ *ஞான வசன வரம், அறிவு வசன வரம், பகுத்தறிதல்* போன்றவை கூர்மை பெறுவது ஆவியானவரின் துணையோடுள்ள திருமறைத் தியானத்தின் மூலமே —
  யோ 16:13,14 ... *சத்திய ஆவியானவர் ...*
  1 கொரி 2:7,13 ... *ஆவியானவர் போதிக்கும் வார்த்தைகள் ...*
  எபி 5:12-14 ... *திடமான ஆகாரம் ... பகுத்தறிய ...*
- ☐ திருமறைத் தத்துவங்களை அறிய அறிய,
  திருமறையின் வரம்புக்குள்ளேயே வரங்களை
  அப்பியாசிக்க நாம் கற்றுக்கொள்வோம்.

### (இ) நம்மை நாமே தூய்மையாக்குதல்

- ☐ கிருபா வரங்கள் ''நம்மில்'' குடிகொள்பவை **அல்ல**;
  அவை நம்மில் வாழும் ''ஆவியானவருக்குள்'' இருக்கின்றன!
  ஆதி 41:15,16 ... *நானல்ல, தேவனே ...*
  அதைப் பார்வோன் ஆமோதித்தான் (வச 38).
  எனவேதான் அவை ''ஆவியானவரின்'' வரங்களாம்!

ஆவியானவரே வரங்களிலெல்லாம் வரமானவர் —

*... பரிசுத்த ஆவியின் வரம் ...* (அப் 2:38; 10:46; 11:17)

ஆவியானவரின் ''வெளிப்பாடுகளே,'' அல்லது அவர் அருளும் *''அனுக்கிரகங்களே,''* வரங்கள் எனப்படுவது (1 கொரி 12:7)

எனவே, ஆவியானவரைத் *''துக்கப்படுத்தும்,'' ''அணைத்துவிடும்''* எதையும் நாம் செய்யக்கூடாது.

(உ-ம்) கெட்ட வார்த்தை, மூர்க்கம், முதலியன (எபே 4:29-31)

நமது வாழ்வில் ஆவியானவருக்கு முழுச் சுதந்திரம் தரவேண்டும் — நமக்கென்று தனி என்று எதுவும் கூடாது! (சங் 139:7,23,24)

□ வரங்கள் ''நமது'' தகுதியின்படியல்ல,
கடவுளது கிருபையின்படியே கொடுக்கப்படுகின்றன —

*நமது பக்தியினால்* நாம் அற்புதங்கள் செய்வதில்லை (அப் 3:12)

ஆனாலும், *பாத்திரம் சுத்தமாயிருக்கவேண்டும்* (2 தீமோ 2:21,22)

இச்சத்தியம் பழைய ஏற்பாட்டிலேயே உண்டு —

யோசு 3:5 ... *இன்று பரிசுத்தம் ... நாளை அற்புதங்கள்*

□ *''கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில்''* நம்மை நடக்கச் செய்வதே ஆவியானவரின் உச்சக்கட்டப் பணி —

ஏசா 11:2 ... இதில் மகுடமானதைக் கவனியுங்கள்!

*''தேவ பயமும்'' ''ஆவியின் ஆறுதலும்''* இணைந்து செல்பவை: அப் 9:31

''தேவ பயம்'' என்றால் அவருக்குப் பிரியமில்லாத எதையும் செய்யாதிருத்தல்.

■ இவ்விதப் பக்திமுயற்சிகளில் கவனம் செலுத்தாது, மக்கள் குறுக்கு வழிகளைத் தேடுகின்றனர்:

(உ-ம்) கைகளை வைக்குதல்

ஓர் எச்சரிப்பு:

1 தீமோ 5:22 ... *சீக்கிரம் யார் மீதும் கைகளை வைக்காதே!*

அதாவது, வாழ்விலுள்ள குற்றங்கள், குறைவுகளுக்கு ஆவன செய்யாது, யாராவது தலையில் கை வைத்து ஜெபிக்கமாட்டார்களா என மக்கள் அலைகின்றனர்.

■ வரங்கள் ஏற்கனவே நம்மிடம் "இருக்கின்றன" —

ரோ 12:6 ... *"வரங்கள் உள்ளவர்களானதால் ..."*

தேவன் ஏற்கனவே அருளிவிட்டார் (வச 3)

1 கொரி 12:7 ... *"அளிக்கப்பட்டிருக்கிறது"*

:28 ... *"ஏற்படுத்தினார்"* (பணியமர்த்தினார்.)

எபே 4:7 ... *"அளிக்கப்பட்டிருக்கிறது"*

நாம் செய்யவேண்டியது —

(அ) வரங்களை அடையாளம் காணவேண்டும்:

உங்கள் ஆர்வம் எங்கே?

உள்ளூர்ச் சபை ஊழியமா?

பல சபைகளில் ஊழியமா?

தொலைவிடப் பணியா?

யாரையோ காப்பியடித்துத் தலையிலடித்துக்கொள்ளாதீர்!

(உ-ம்) சவுலின் கவசம் தாவீதுக்குப் பொருந்தாது (1 சாமு 17:38,39).

தேவன் உங்களை ஒரு மூக்காக இருக்க அழைத்திருந்தால், கண்ணாக மாற முயற்சிக்காதீர்! (1 கொரி 12:17)

(ஆ) வரங்களை அனல்மூட்டி, எழுப்பி, கூராக்குங்கள்.

பக்தி முயற்சிகளோடு, பயிற்சியும் பெறுங்கள் —

(உ-ம்) *"உதவிகள் ... ஆளுகைகள்* (1 கொரி 12:28)

மேலாண்மைக் கருத்தரங்குகள் ...

தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்கள் ...

(உ-ம்) *"இரக்கம் காட்டுதல்"* (ரோ 12:8இ)

World Vision / Missionaries of Charity / முதலியவை

(இ) வரங்களைப் பயன்படுத்துங்கள்.

*"ஊழியங்களை"* நிறைவேற்றவே *"வரங்கள்;"*

கடவுளது *"செயல்களை"* நடத்தவே *"ஊழியங்கள்."*

கடவுளுக்கு மகிமை; மக்களுக்கு நன்மை! (1 கொரி 12:4-6)

(பார்க்க: பக்கங்கள் 68-70, 259-262, 651-656, 691-695, 735-737)

## எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?

**9. வரங்களை வியாபாரமயமாக்கக்கூடாது.**
Do not merchandise the gifts.

- வரங்களைக் குறித்து இயேசு பேசத் தொடங்கியபோதே
  அவை வியாபாரமயமாக்கப்பட முடியுமென அறிந்திருந்தார் —
  மத் 10:8-10... *இலவசமாய்ப் பெற்றீர்கள்... இலவசமாய்க் கொடுங்கள்*

  — *பணப்பையைச்* சீடர் எடுத்துச் செல்ல அனுமதியாதபோதிலும் ...

  — அவர்கள் *"கூலிக்குப்"* பாத்திரர் என்றபோதிலும் ...

- ஊழியத்தில் பொருளாசை புதிய காரியமல்ல —
  *தீர்க்கதரிசிகள் ... ஆசாரியர் ... சமாதானம் ... சமாதானம் ...*
  எரே 6:13,14

  பண ஆசைக்குப் பிரபல எடுத்துக்காட்டு: **தீர்க்கன்** பிலேயாம்
  யூதா 11 ... *கூலிக்காய் விரைந்தோடி ... பிலேயாமின் வஞ்சகம்*

- அதே வேளையில்,
  பின்பற்றுதலுக்கேற்ற எடுத்துக்காட்டுகளும் பைபிளில் உண்டு —

  - ☐ தீர்க்கன் எலிசா
    2 இரா 5:15,16 ... நன்றிக் கடனாய் ஏற்பதில் தவறில்லை எனினும் ...
    *"கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ..."* என்றெல்லாம் பேசிய
    கேயாசியோ பண ஆசையில் சிக்கியிருந்தான் — 2 இரா 5:20 (வச 16)

  - ☐ தீர்க்கன் தானியேல்
    நேபுகாத்நேச்சார் கொடுத்த வெகுமதிகளை ஏற்றான்
    தானி 2:47,48 (நன்றி)

    பெல்ஷாத்சார் கொடுத்தவற்றையோ ஏற்க மறுத்தான்
    தானி 5:16,17 (பேரம்)

  - ☐ அப்போஸ்தலன் பேதுரு
    மாய வித்தைக்காரன் சீமோன் (அப் 8:18-23)

*"நாசம் ... இதயம் ... துர்க்குணம் ... பிச்சு ... கசப்பு ...*

*கட்டப்பட்டிருக்கிறாய் ... அக்கிரமம் ..."*

(திருமுழுக்கு பெற்று பிலிப்புவுடன் இருந்தாலும் — வச 13)

- கிருபாவரங்கள் வியாபாரமயமாக்கப்படுதல் குறித்துப் பேசுகையில், குறிப்பாய் 5 எச்சரிப்புகள் விடுக்க விரும்புகிறேன் —

**(அ) பிரபலமடைய நாடாதீர்.**

☐ யோ 7:2-6 ... *பிரபலமாக விரும்புகிற எவனும் ...*
ஆதரவாளர்களால் ஆட்டிப்படைக்கப்படாதீர்.
ஜெபத்துடன் கடவுள் அனுப்புமிடத்திற்கு மட்டும் செல்லுங்கள்
—*"என் வேளை ..."*

☐ ஆதி 49 ... தனது மகன்களைக் குறித்து யாக்கோபின் தீர்க்கதரிசனம்:
எதையும் தயங்காது தெளிவாய்ச் சொன்னான் —

வச 4 ... ரூபன் ... *நீ மேன்மையடையமாட்டாய்!*
வச 5,6 ... சிமியோன் & லேவி ... *அவர்களது ஆலோசனை வேண்டாம்*
வச 21 ... நப்தலி ... *இன்பமான வசனங்கள்*
வச 22 ... யோசேப்பு ... *கனி தரும் செடி*
வச 27 ... பெஞ்சமின் ... *பீறும் ஓநாய்*

முடிவுரையைப் பாருங்கள்: வச 28...*"அவனவனுக்குரிய* ***ஆசீர்வாதம்"***
கடிந்துரையும் *ஆசீர்வாதம்தான்!* இன்றோ இது அபூர்வம்!

(உ-ம்) தீர்க்கதரிசனம் உரைத்தல் — 1 கொரி 14:3
(அ) பக்திவிருத்தி (ஆ) புத்தி (இ) ஆறுதல்
இன்று பெரும்பாலும் (இ) மட்டும்தான்; (அ), (ஆ) எங்கே?

உதைக்கப்பட்டாலும் தீர்க்கன் மிகாயா போலிருங்கள் —
1 இரா 22:7,8,13,14,24

ஆவியானவர் முதலாவது *"உணர்த்துகிறார்;"* பின்புதான் *"தேற்றுகிறார்!"*
தானியத்தைச் சேர்க்க *"சுளகு;"* பதரை எரிக்க *"நெருப்பு!"* (மத் 3:12)

**(ஆ) மக்களை உங்கள் வசம் ஈர்க்காதீர்.**

- ☐ யோ 1:35-37 ... தனது சீடர் இயேசுவின்பின் செல்ல
  திருமுழுக்கினன் யோவான் விட்டுவிட்டான்!
- ☐ வரங்களில் முதல் பாடம்: 1 கொரி 12:2,3 ... *''இயேசுவே கர்த்தர்!''*
- ☐ அப் 3:12 ... பேதுரு & யோவான்... *ஏன் எங்களைப் பார்க்கிறீர்கள்?*
- ☐ அப் 14:14,15 ... லீஸ்திராவில் பவுல் & பர்னபா —
  *... உடைகளைக் கிழித்து ... ஓடி ... வீணான காரியங்கள் ஏன்?*
- ☐ யாத் 34:29,30 ... *மோசேயின் முகத்தில் பிரகாசம்... அவனுக்குத் தெரியாது!* (மெய்யான தாழ்மை: எண் 12:3)
  ஆரோனுக்கும் மக்களுக்குமோ தெரிந்தது!
  தீர்க்கர்களில் பெரியவன் ... *முகமுகமாய் ...*
- ☐ மக்களை வசப்படுத்தத் தீர்க்கதரிசனம் சொல்லாதீர் —
  அவர்களை அடிமையாக்க — **மனதை அறிந்துவிடல்**
  (mind reading)

  2 கொரி 1:24 ... *சர்வாதிகாரமா சகாயமா?*
  *சிறையாக்குதலா சிறப்பித்தலா?*

**(இ) பகட்டாயிருக்க முயலாதீர்.**

- ☐ கை வைத்ததும் மக்கள் கீழே விழுவதாகத் திரும்பத் திரும்ப ஒளிபரப்பில் காட்டுவது தேவையா?
  அதினால் என்ன பயன்?
- ☐ பிசாசுகளை இயேசு பேசவிடவில்லை! (லூக் 4:41)
  (நாமோ பிசாசு பிடித்தவனிடம் மைக்கைக் கொடுக்கிறோம்!)
- ☐ உயரத்திலிருந்து இயேசு குதிக்கவில்லையே! (மத் 4:6,7)
- ☐ வரங்கள் பிறர்க்குப் *''பணி''* செய்யவே, ''படம்'' காட்ட அல்ல!
  (1 பேது 4:10)

**(ஈ) ஊழிய அறிக்கைகளை மிகைப்படுத்தாதீர்.**

அறிக்கைகள் வெளியிடும்போது உண்மை தேவை —

- ☐ குருடன் ... *இரண்டாம் தொடுதல்* (மாற் 8:22-25)

(அற்புதம் நடந்தால் பிரசங்கிக்குத் துதி; இல்லையேல் மக்கள்மீது பழி)

☐ பவுலின் சாட்சி: (ரோ 15:17-19)

*''அற்புதங்கள் ... அடையாளங்கள் ... துணிவதில்லை''*

**(உ) கவர்ச்சிகளுக்குப் பின்னால் போகாதீர்.**

☐ (உ-ம்) ஒவ்வொரு பிரசங்கியும் பாடி ஒலித்தட்டு வெளியிடவேண்டியதில்லை.

மக்களின் அழுத்தங்களுக்கு இடங்கொடுக்காதீர்!
பில்லி கிரகாம் பிரசங்கபீடத்தில் பாடுவதில்லை!
1 கொரி 12:17 ... எல்லாரும் *கண்ணானால் ... காதானால் ...?*
*உங்கள் அழைப்பிலேயே நில்லுங்கள்* (1 கொரி 7:20,24)
கவர்ச்சிகர ஊழியங்களைக் காப்பியடிக்காதீர்.

''மறைவில் பணியாற்றுவோர்'' குறைந்துவருகின்றனரே —
அவர்கள்தான் இருதயம் ... நுரையீரல் ... கல்லீரல் ... சிறுநீரகங்கள்
(அதிமுக்கிய உறுப்புகள்)

**முடிவாக,**

■ எவ்வித ஊழியமாயினும் அதை விலைக்கு விற்காதீர்.

(உ-ம்) சிறப்புக் காணிக்கைக்குச் சிறப்பு ஜெபம்,
ஊழியர் நேர்காணல், வீடு சந்திப்பு, முதலியன ...

பரிசுத்த தேவனுக்கு இவையெல்லாம் அருவருப்பு!

## 10. ஆவியானவரின் கனிகளைக் கவனியாதுவிடக்கூடாது.
Do not overlook the fruits of the Spirit.

- எழுதப்பட்டுள்ளவற்றில் கிறிஸ்துவின் மிக நீண்ட பிரசங்கம் மலைப்பிரசங்கம்தான் —

  இதில் அவர் "வரங்களைவிட" ஆவியின் "கனியைப்" பற்றியே அதிகம் வசனித்திருக்கிறார் —

  பாக்கிய வசனங்களிலிருந்து தொடங்கும் இச்சொற்பொழிவில் வரங்களைக் குறித்த குறிப்பு ஒன்றேதான்: மத் 7:22

  இங்கும்கூட, முந்திய வரிகள் *"கனி"* பற்றியவை (வச 16-20)

- கிறிஸ்தவர்களைப் பொதுவாக இரு குழுக்களாய்ப் பிரிக்கலாம் —

  பெந்தெகொஸ்தேயினர்: **வரங்களை** வலியுறுத்துவோர்
  பெந்தெகொஸ்தேயினரல்லாதோர்: **கனிகளை** வலியுறுத்துவோர்

  கொரிந்து சபை ஒரு பெந்தெகொஸ்தே சபை —
  1 கொரி 1:7 ... *ஒரு வரமும் குறைவற்றோராய் ...*
  ஆனால் *மாம்சீகம்* அதிகம் (3:3)

  இதனால் பவுல் வரங்களை அவமதிக்கவில்லை —
  மாறாக, இரண்டையும் இணைத்தான்: 1 கொரி 14:1
  ***அன்பை*** *நாடுங்கள்,* (அத்துடன்) ***ஞான வரங்களையும்*** *விரும்புங்கள்*

  கனிகளில்லாது வரங்களா? **இல்லை!**
  வரங்களில்லாது கனிகளா? **இல்லை!**
  ஆனால், கனிகளுடன் வரங்கள்
  வரங்களுடன் கனிகள்
  இதுவே திருமறையின் சமநிலை.

- இந்தச் சமநிலை முக்கியத்துவம் புதிய ஏற்பாடு எங்கும், சிறப்பாய்ப் பவுலின் நிருபங்களில், தெளிவு —

☐ ரோ 12:6-8 ... வரங்கள்

:9,10 ... அன்பு

☐ வரங்களை வரிசைப்படுத்துகையில்,

முக்கியப்படுத்தப்படுவது ''ஒருமனம்.''

1 கொரி 12:8,9,11 ... *அதே ... அதே ... அதே*

:4,5,6 ... *ஒருவரே ... ஒருவரே ... ஒருவரே ...*

☐ ''கனிகளை'' வெளிப்படுத்துவதைவிட

''வரங்களை'' அப்பியாசிப்பது பரவசமானது.

இதுவே கொரிந்து சபையிலிருந்த பிரச்னை.

எனவேதான், 1 கொரி 12, 13 & 14இன் நோக்கம்
வரங்களைப்பற்றிப் போதிப்பதல்ல, அன்பையும் ஒருமனத்தையும்
வளர்க்க வரங்களை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதே!

☐ தீமோத்தேயுவிலிருந்த வரங்களை எழுப்பிவிடும்போதும் —
2 தீமோ 1:6,7 ... *''பலமும்* ***அன்புமுள்ள*** *ஆவி ...''*

☐ அற்புத அடையாளங்கள் குறித்துப் பவுலின் சொந்த சாட்சி —
2 கொரி 12:12 ... *அடையாளங்கள் ... சகலவிதப்* ***பொறுமை***

■ பரிசுத்த ஆவியானவர்தான் ஒருமனப்படுத்துவதில் வல்லவர்;
அவரைப்பற்றிப் பேசும்போதே ஒருமனம் குலையுமானால்
முற்றும் கோளாறுதான் —

1 கொரி 12:13 ... ***ஒரே ... ஒரே*** *ஆவியானவர்*

*யூதர்* vs. *கிரேக்கர்* ... இன/பிராந்திய வேறுபாடு

*அடிமை* vs. *உரிமைக் குடிமகன்*... சமுதாய வேறுபாடு

— பெந்தெகொஸ்தே அனுபவத்தின் உடனடி விளைவு

அப் 2:4,44-46

4ஆம் வசனத்தில் நிறுத்தாதீர்; 44ஆம் வசனம் செல்க!

— தீர்க்கதரிசனமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது

சங் 133:1-3 ... *ஒருமித்து ... தைலம் ... பனி*

■ தூயாவியானவர் நமது வாழ்வில் செயல்படுவதற்குப் பிரதான காரணம் ''தேவ பக்தியை'' நம்மில் வளர்ப்பதே.

☐ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்

மத்3:10-12 ... *கனி ... நெருப்பு ... பதர் ...*

☐ *''வல்லமையும்'' ''வாக்குகளும்''*

2 பேது 1:3,4 ... *வல்லமை ... தேவ பக்தி ... தெய்வீக சுபாவம்*

☐ ஊனியல்பின் செயல்களுக்கு எதிராக ...

கலா 5:16 ... *ஆவி* vs. *மாம்சம்*

:19-21 ... *மாம்சத்தின் கிரியைகள்*

:22,23 ... *ஆவியின் கனி**யோ***

*''இவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை!''*

அதாவது, இதற்கு மிஞ்சியது எதுவுமில்லை.

வரங்கள் ''ஏதுக்கள்'' என்றால்,

கனிகள் ''விளைவு'' என்றாகும்!

☐ ஆவியானவரின் அனுதினப் பணி

2 கொரி 3:17,18 ... *மகிமையின்மேல் மகிமை ... சாயல் ...*

*''பரிசுத்த'' ஆவியானவர்!* [*மறுரூபமடைந்து ...*

■ இன்றையச் சோக நிலை:

ஒன்று வரங்கள் **இல்லாது** செயல்படுவோம்;

அல்லது அன்பு **இல்லாது** வரங்களைச் செயல்படுத்துவோம்!

திருத்தம்:

1 கொரி 12:31 ... *''முக்கியமான'' வரங்கள் ...*

*''மேன்மையான''* ***வழி*** ...

அதுதான் ***அன்பு*** (13:1)

வரங்களின் துர்ப்பிரயோகம்:

(உ-ம்) லூக் 9:52-55 ... *சமாரியர் கிராமம் ... அக்கினி ...*

*என்ன ''ஆவி?''*

■ நமது ஆன்மீகத் தரத்தை அளப்பது வரங்களல்ல.
இங்குதான் வழி பிசகிவிட முடியும் —

☐ மோசே ... அவிசுவாசம் ... கர்த்தர் நாமத்திற்குக் கனவீனம்
(பரிசுத்தக் குலைச்சல்)

எண் 20:7-13 ... *பேசு ... ஆனால் அடித்தான் ...*
ஆனாலும் தண்ணீர் வந்தது!
உபா 32:48-52... கானானுக்குள் நுழைய அனுமதியில்லை.

☐ சவுல் மன்னன் ... கீழ்ப்படியாமையினால் தள்ளப்பட்ட பின்னரும்
தீர்க்கதரிசனம் உரைத்தான்.

1 சாமு 10:11 ... இராஜாவாக அபிஷேகிக்கப்பட்டபோது ...
15 ... கீழ்ப்படியாமை ... அமலேக்கியர்
19:23,24 ... பின்மாற்றத்திற்குப் பின்னரும் ...

☐ சிம்சோன் ... தெலீலாளின் மடியில் வல்லமையிழந்தான் ...
அதை அவன் அறியவில்லை (நியா 16:20)
தேவன் மறுபடி அவனைப் பயன்படுத்தினார் (வச 28,30)

ஏன் இப்படியெல்லாம்? இது சாத்தியம்தானா?

பதில்: வரங்களைக் கடவுள் உடனடியாய் எடுத்துவிடுவதில்லை —
ரோ 11:29 ... *கிருபா வரங்கள் ... அழைப்பு ... மாறாதவை*

■ இன்னொரு முக்கிய கருத்து:

இவையெல்லாம் ''நமது'' கனியல்ல;
''ஆவியானவரின்'' கனியாம்!

வரங்கள் ஆவியானவருடையவை;
அப்படியே, கனிகளும் ஆவியானவராலானவை.
யோ 15:5 ... *செடி ... கொடிகள் ... சத்து*

எனவேதான் இயேசு இவ்விதம் குறிப்பிட்டார் —
***எனது*** *அன்பு* (யோ 15:9)
***எனது*** *சந்தோஷம்* (15:11)
***எனது*** *சமாதானம்* (14:27)

■ **முடிவுரை**

ஆவியானவர் நமக்குத் தந்துள்ள
அனைத்து **வரங்களையும்** பயன்படுத்துவோம்;
ஆவியானவர் மூலம் நமது வாழ்வில்
அனைத்துக் **கனிகளையும்** விளைவிப்போம்!

பெந்தெகொஸ்தே வாழ்த்துக்கள்!